1972 மார்ச் 9]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, லாரிகளை நாட்டுடமையாக்கும் திட்டம் தற்போது இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாட்டு மக்களின் பாதுகாப்புக்கும், உடைமைக்குப் பாதுகாப்பும் இருக்கின்ற வகையிலே லாரிகளில் மீட்டர்களைப் பொருத்துவதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் வேகமானிகளைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அவைகளில் ஒழுங்காக வேகமானிகளைப் பராமரித்துக் கொள்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றி போக்குவரத்துத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, லாரிகளை நாட்டுடமையாக்கும் திட்டம் இப்பொழுது இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். கொள்கை அளவிலாவது நாட்டுடமையாக்கும் முறையில் லாரிகளை நாட்டுடமையாக்கும் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வி நேரங்களில் கொள்கைப் பிரச்சினைகளைச் சொல்வதற்கில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இரவு நேரங்களில் லாரிகள் வேகமாக ஓட்டப்படுவதால் பல விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தினால் இரவு நேரங்களில் லாரிகளை ஓட்டாமலிருக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

Food carrying baskets in State Transport buses in Madras

* 399 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state whether food-carrying baskets are being permitted to be carried in Government buses in Madras City?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது சென்னை மாநகரப் பேருந்துகளை இயக்கி வருகிற பல்லவா போக்குவரத்துக் கழகம், சாப்பாட்டுக் கூடைகளைப் பேருந்துகளில் கட்டணமின்றி எடுத்துச் செல்ல தொடர்ந்து அனுமதித்து வருகிறது.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, சட்டசபை, சட்ட மன்ற மேலவைகளின் உறுப்பினர்களுக்கு ஃப்ரி பாஸ் கொடுத்திருந் தார்கள். இப்பொழுது அரசாங்க பஸ்களை கார்ப்பொரேஷனாக ஆக்கிவிட்டதால் அந்தச் சலுகை நீட்டிக்கப்படுமா அல்லது பறிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த சலுகை நீடிக்கப்படும்.

Re-treading of tyres

* 400 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken to get the tyres of Transport buses re-treaded in the Department Workshop itself?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை போக்கு வரத்து இல்லத்திலும், நாகர்கோயில் ராணித் தோட்டம் பணிக் களரியிலும் உள்ள இரு டயர் புதுப்பிக்கும் பிரிவுகளில், அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளின் டயர்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், நாகர்கோயில் ராணித் தோட்டத்திலே இப்பொழுது அமைந்திருக்கும் அந்த ஓர்க்ஷாப் எல்லா அமைப்புகளையும் பெறவில்லை. ஆகவே அதை விஸ்தரித்து போதிய வசதிகளை ஏற்படுத்த அமைச்சரவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நாகர்கோயிலில் இப்பொழுது நாள் ஒன்றுக்கு 24 டயர்கள் புதுப் பிக்கும் வசதிகள் இருக்கின்றன. அவர்களும் கடந்த ஆண்டு 5,702 டயர்களைப் புதுப்பித்திருக்கிறார்கள். ஆகவே வேலை ஒழுங் காகத்தான் நடைபெறுகிறது. அப்படி எதுவும் பொருள்கள் இல்லை என்றால், பற்றுக்குறை ஏற்பட்டால் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திருமதி த. ந. அனந்தநாயகி : புதுப்பிக்கப்பட வேண்டிய எல்லா டயர்களுமே இந்த இரண்டு இடங்களில்தான் ரிட்ரீட் செய் யப்படுகிறதா ? அல்லது வெளி கம்பெனிகளுக்கும் கொடுக்கப்படு கிறதா ? அப்படிக் கொடுத்தால் எந்தெந்தக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்படுகிறது ?